மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 82, திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

82--

மாவட்டந்தோறும் சிறப்பு நீதிமன்றம் அமைத்தல்.

* *9777*–திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) 1989 ஆம் ஆண்டு பிறப்படுத்தப்பட்ட அரிசன மற்றும் மலைவாழ் பழங்குடியினர் (பாதுகாப்பு) சட்டம், 11-9-1989-ல் குடியரசுத் தலைவர் ஒப்புதல் பெற்று 20-1-1990 முதல் அமுலாக்கப்பட்டு, அச்சட்டத்தின் 14-வது பிரிவின்படி அவ்வழக்குகள் மீது துரித நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, மாநில அரசு, உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி அவர்களின் ஒப்புதல் பெற்று மாவட்டந்தோறும் ஒரு சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க தமிழ்நாடு அரசிதழில் ஓர் அறிவிப்பு வெளியிட்டும் இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளாததை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், மாவட்டந்தோறும் சிறப்பு நீதிமன்றம் அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

முற்பகல் 10.05

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இச்சட்டம் 29-1-1990 முதல் மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களில் செயல்பட்டு வருகிறது.

திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிந்த வரை நான் சார்ந்திருக்கும் செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் இதுபோல், Scheduled Castes and Scheduled Tribes (Prevention of Atrocities Act) என்பது அமலில் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி இருந்தால் தயவு செய்து அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 16]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அமல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. எ. ஏகாம்பர ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-9-1989-வது ஆண்டு குடியரசு தலைவரால் ஒப்புதல் பெறப்பெற்று 20-1-1990-வது ஆண்டு இது அமல் ஆக்கப்பட்டு ஒவ்வொரு மாநிலத்திலேயும் மாவட்டம் தோறும் ஸ்பெஷல் கோர்ட்ஸ் நிறுவி இருப்பதாக நான் அறிகிறேன். சமீபத்தில் இருக்கக்கூடிய ஆந்திர மாநிலம், கர்நாடகம், மத்திய பிரதேஷ், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களில், இது நல்ல முறையில் செயலாக்கப்படுவதாக நான் அறிகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் எங்கள் ஜில்லாவிலே இது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. பெருவாரியான அரிசன மக்கள் மலைவாழ் மக்கள் என்னிடத்திலே வந்து, எங்களுக்கு நீதி, நியாயம் வழங்க வேண்டுமென்றால் எங்களுக்கு சட்டப்படி குடியரசுத் தலைவரால் ஒப்புதல் பெறப்பட்ட அந்த சட்டத்திற்கு உட்பட்டு தனி நீதிமன்றத்தை நமது ஜில்லாவிலேயாவது உடனடியாக நிர்மாணம் செய்வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று என்னைக் கேட்டார்கள். அதற்காக அமைச்சரின் மூலமாக எனக்கு ஒரு கன்பர்மேஷன் தேவை என்று உங்கள் மூலமாக நான் அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் தமிழகத்திலேயும் எல்லாத் தலைநகரங்களிலேயும் இருக்கக் கூடிய செஷன்ஸ் கோர்ட்டிலே அமல் செய்யப்பட்டு வருகிறது. நம்முடைய செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர் மாவட்டத்திலேயும் அந்த வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு செஷன்ஸ் நீதிபதி அதை பைசல் செய்கிறார். தமிழ்நாட்டில் 4 இடங்களில் இதற்காக ஸ்பெஷல் கோர்ட்ஸ் exclusively for this Act, என்று இதை விசாரிப்பதற்காகவே தனி செஷன்ஸ் நீதிபதிகள், திருநெல்வேலி, மதுரை, திருச்சி, கும்பகோணம் ஆகிய 4 இடங்களில் ஸ்பெஷல் ஜட்ஜஸ் exclusively for trying these offences அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மற்ற இடங்களில் எல்லாம் அங்கே இருக்கிற வழக்குகள் பொறுத்து--ஏனென்றால் மற்ற மாவட்டங்களில் எல்லாம் அதிக வழக்குகள் இல்லாத காரணத்தினால் அமைக்கப்படவில்லை. ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட வேண்டுமென்றால் போதுமான வழக்குகள் தேவை. இன்றைக்குத் திருநெல்வேலியிலும், மதுரையிலேயும், திருச்சியிலேயும், கும்பகோணத்திலேயும் போதுமான வழக்குகள் இருக்கிற

காரணத்தால் மத்திய அரசினுடைய ஆணையின்படி அங்கே ஸ்பெஷல் கோர்ட்டுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. நாளைய தினம் அல்லது எதிர்காலத்தில் செங்கற்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் வழக்குகள் அதிகமாக ஆகுமேயானால்,--தேவையான ஸ்பெஷல் கோர்ட்டுகள் உயர்நீதிமன்றத்தினுடைய ஒப்புதலோடு, நிச்சயமாக அங்கே மட்டுமல்ல, தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லாத் தலைநகரங்களிலேயும், தமிழக அரசு நிறுவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 83, திரு. ஜெ. பாலகங்காதரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

83--

வருவாய்க் கிராமங்களின் எல்லைகளை மாற்றியமைத்தல்.

** 11525*–திரு. ஜெ. பாலகங்காதரன்:

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) வருவாய்க் கிராமங்களின் எல்லைகள் மாற்றி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : பொது மக்களுடைய வசதிக்கேற்றவாறும் மற்றும் நிர்வாக வசதிக்கேற்றவாறும் தேவைப்படும் இடங்களில், கிராமங்களைப் பிரிப்பதும், எல்லைகளை அமைப்பதும் நடைபெறும்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. இருந்தபோதிலும் எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த மட்டிலும் அதிக அளவுக்கு வருவாய் கிராமங்கள் ஒவ்வொன்றும் லேப்ஸ் ஆகி, ஒன்றுக்குமேல் ஒன்றாக இன்று அருகருகே இருந்தும் அது மற்ற கிராமங்களோடு சேர்க்கக் கூடிய நிலைமையில் இருந்து வருகிறது. எனவே ஒரு வருவாய்க் கிராமத்தின் மத்தியிலே மற்றொரு வருவாய் கிராமப் பகுதி இருக்கிறது. இதனால் பொது மக்களுக்கு மிகுந்த சிக்கல் ஏற்படுகிறது.